SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# FIRST YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2011/2012

HELD IN APRIL / MAY 2013

## BBA 15 MANAGEMENT AND ENTREPRENEURIAL SKILLS

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம் 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) முகாமைத்துவம் (Management) என்ற பதத்தினை வரையறைசெய்து,இருபத்தோராம் நூற்றாண்டில் நிறுவனங்களை முகாமை செய்வதில் தாக்கம் செலுத்தும் பல முக்கிய காரணிகளை விளக்குக. (07 புள்ளிகள்)

(ஆ) முகாமையாளர்கள் தங்களது வேலைகளை வடிவமைக்கவும், தமது பங்கினை செயற்படுத்தவும், திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிநடத்தல், கட்டுப்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடவும் பேதியளவு அறிவு மற்றும் முக்கிய முகாமைத்துவ திறன்கள் அவசியமாகும்.

முகாமைத்துவ செய்முறையில் இத்திறன்களை (Skills) வரையறை செய்து, முகாமைத்துவ மட்டங்களுக்கேற்ப அவை எவ்வாறு வேறுபடுகின்றன என விளக்குக. (08 புள்ளிகள்)

(இ) பழமைக் கோட்பாட்டு அணுகுமுறையானது (The classical viewpoint) நிறவனத்தினையும் வேலைகளையும் வினைதிறனாக முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான வழிவகைகளை வடிவமைப்பதில் அழுத்தம் கொடுக்கின்றது.

மூன்று வேறுபட்ட பழமைக் கோட்பாட்டு அணுகுமுறைகளுடன் இக்கூற்றினை விளக்குக. (10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

02. (அ) தீர்மானம் எடுத்தல் செய்முறை எனப்படுவது முகாமையாளர்கள் நிறுவனங்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றினை தீர்பதற்கு முயற்சிக்கும் ஒரு செய்முறையாகும்.

தீர்மானம் எடுத்தல் செய்முறையினை விபரித்து, நிறுவனங்களில் தீர்மானம் எடுத்தல் செய்முறையில் நிகழக்கூடிய பொதுவான பக்கச்சார்புகளை (Common decision making biases) விளக்குக. (06 புள்ளிகள்)

(ஆ) பல்வேறு பட்ட நிறுவனங்களினால் திட்டங்களையும் இலக்குகளையும் இணைப்பதற்கு பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாக Management by Objectives (MBO) காணப்படுகின்றது.

நடைமுறைக்கு மிகவும் சாத்தியமான MBO முறைமையை வரையறை செய்து, அவ்வணுகுமுறையின் பலம் மற்றும் பலயீனம் ஆகியவற்றை விளக்குக. (07 புள்ளிகள்)

(இ) நிறுவன இலக்கினையும் தனிநபர் மற்றும் குழு இலக்கினையும் இணைப்பதற்காக நிறுவனங்களினால் வடிவமைக்கப்பட்ட முறையான ஒழுங்கமைப்பு மற்றும் தொடர்பாடல் கட்டமைப்பு ஆகியவற்றினை நிறுவனக்கட்டமைப்பு என வரையறை செய்யலாம்.

நிறுவனக்கட்டமைப்பின் கூறுகளை (The elements of organizational structure) சுருக்கமாக விளக்குக. (07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. (அ) மனிதவளமுகாமைத்துவ செய்முறைகளை(The human resource management process) சுருக்கமாக வரையறை செய்து அதன் தந்திரோபாய முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

(ஆ) மாற்ற முகாமைத்துவ (Change management) மற்றும் புத்துணர்வாக்க (Innovation) செய்முறைகள் முக்கியமான புதிய சிந்தனைகளை உள்வாங்குவதனால் ஒரு கடினமான விடயமாக காணப்படுகிறது.

மாற்ற முகாமைத்துவத்னை புத்துணர்வாக்கத்திலிருந்து வேறுபடுத்தி,மாற்றத்தினை எதிர்பதற்கான (Resistance to change) காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(இ) மனநலக்கோட்பாடுகள் (The cognitive theories) நடத்தை எவ்வாறு அமைய வேண்டும் அல்லது அமைய கூடாது என்பது தொடர்பான தீர்மானத்தினை மேற்கொள்ளவதில் சிந்தனை முறைமையினை பிரயோகிக்க முனைகின்றது.

ஊக்கப்படுத்தல் மனநலக்கோட்பாடுகளில் ஒன்றை சுருக்கமாக விளக்கி, இக்கோட்பாடு எவ்வாறு ஊக்கப்படுத்தல் செய்முறையை வடிவமைக்கின்றது என விளக்குக(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. (அ) சந்தர்ப்பவாத தலைமைத்துவக் கோட்பாட்டினை (Situational Leadership Theories) வரையரை செய்து, அக்கோட்பாடுகளில் ஒன்றை விளக்குக. (08 புள்ளிகள்)

(ஆ) நிறுவன நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் உண்மையான பெறுபேற்றினை நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட நியமத்துடனும் இலக்குடனும் உறுதிசெய்கின்ற செய்முறையை கட்டுப்படுத்தல் என வரையறை செய்யலாம்.

எவ்வாறு கட்டுப்படுத்தல் செயற்பாடனது முகாமைத்துவ மட்டங்களுக்கு ஏற்ப மாறுகின்றது என விபரிக்குக. (08 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

05.(அ) முயற்சியாண்மை (Entrepreneurship) என்ற பதத்தினை வரையறை செய்து முயற்சியாண்மை வாய்ப்புக்களை உருவாக்குவதில் புத்துணர்வாக்கத்தின் பங்கினை விளக்குக. (05 புள்ளிகள்)

(ஆ) முயற்சியாண்மையொன்றில் ஈடுபடுவதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிப்பதில் பல்வேறு காரணிகள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

முயற்சியாண்மையொன்றில் ஈடுபடுவதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிப்பதில் ஆதிக்கம் செலுத்தும் காரணிகளை அடிப்படையாகக்கொண்டு இக்கூற்றை விளக்குக. (07 புள்ளிகள்)

(இ) நிதிரீதியான வருமானம் மற்றும் இலக்கினை அடைதல் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்ட குறிப்பிடத்தக்க திருப்தியினை சிறுவியாபாரங்களும் ஏனைய புதிய முயற்சிகளும் தருகின்றன. அதேநேரம் இவ்வாறான முயற்சிகள் பல்வேறுபட்ட தனித்துவமான விடயங்களிலும் பிரச்சினைகளிலும் ஈடுபடுகின்றன. விளக்குக. (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)